**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : CC.No.228/2016**
**வழக்கு சாட்சி PW-4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செல்வியா ஜாஸ்மின் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | ஆரோக்கியசாமி | தொழில் | : | காவல் ஆய்வாளர் |
| கிராமம் | : | விருதுநகர் | வயது | : | 46 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on Tuesday of 02.06.2026.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை. சாட்சி காணொளி மூலம் ஆஜரானார்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது அப்பயநாயக்கம்பட்டி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் கடையநல்லூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, கடந்த 28.03.2016 ம் தேதி, 21.30 மணிக்கு அசன்முகமது என்பவர் கொடுத்த புகார் மனுவைப் பெற்று , அதன் தன்மைப்படி காவல் நிலைய குற்றஎண்.98/2016, சட்டப்பிரிவு 304(A) இதசவின் படி முதல் தகவல்அறிக்கை பதிவு செய்து, அதன் அசலை தென்காசி நீதித்துறை நடுவர் நீதீமன்றத்திற்கும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும், ஒரு நகலை காவல் ஆய்வாளர் பார்வைக்கும் வைத்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆகும். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

(எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியும், எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு அளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. )

சாட்சி விருதுநகர் மாவட்டம், சாத்தூர் சார்பு நீதிமன்றம் காணொளி அறையில் இருந்து காணொளி மூலம் ஆஜரானார். அவரது வாக்குமூலம் Tmt. Sarathidevi, Head Clerk விருதுநகர் மாவட்டம், சாத்தூர் சார்பு நீதிமன்றம் என்பவர் முன்னிலையில் ஒருங்கிணைக்கப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் எதிரி முன்னிலையில் பெஞ்ச் கிளார்க் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.06.16 11:00:47 +0530